பக்கங்கள் 18+3

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 11 செவ்வாய்க்கிழமை 28.10.2025 | அதிர்வு 89

## அரசுக்கு எதிரான பேரணி: சஜித் அணி பங்கேற்காதாம்

### சுஜீவ சேனசிங்க அறிவிப்பு

நுகேகொடையில் எதிர்வரும் நவம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள அநுர அரசுக்கு எதிரான பேரணியில் 04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



### பாதாள உலகக் குழு விவகாரம்:

# தெற்குக்குக் கறுப்பு முத்திரை! வடக்குக்கு வெள்ளையடிப்பு!!

## இப்படிச் சீறுகின்றது மஹிந்த அணி

பாதாள உலகக் குழு விடயத்தில் தெற்குக்குக் கறுப்பு முத்திரை குத்திவிட்டு, வடக்குக்கு வெள்ளையடிப்பு செய்யும் நடவடிக்கையே தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் இடம்பெறுகின்றது என்று கடும் சீற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன ஊடகங்களிடம் இந்த விமர்சனத்தை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 04

# மன்னார் மக்களின் குரல்களுக்கு வலுச்சேர்க்க களத்தில் இறங்கியது மெதடிஸ்த திருச்சபை!




(எஸ்.நிதர்ஷன்)

மன்னார் காற்றலை மின் உற்பத்தி ஆலை விவகாரம் மக்களின் நலன்களுடன் அவர்களது கருத்துக்களுக்கும் முதன்மை கொடுக்கப்பட வேண்டும் என்று இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் முகாமைக் குரு கந்தையா ஜெகதாஸ் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு கூறிய அவர் மேலும் கூறுகையில்,

“இன்று மன்னார் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுள் ஒன்றாக இந்த காற்றலை விவகாரம் மாறியுள்ளது. 04



# மனிதப் புதைகுழிக்கு நீதி கோரி செம்மணியில் இன்று போராட்டம்



**(எஸ்.நிதர்ஷன்)**

செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரி யாழ்ப்பாணம் – செம்மணி வளைவுக்கு அருகில் இன்று செவ்வாய்க்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை மெதடிஸ்த திருச்சபை மற்றும் நீதிக்கும் சமாதானத்துக்குமான பணிக் குழு ஆகியவை இணைந்து முன்னெடுத்த இந்தப் போராட்டத்தில் மதத் தலைவர்கள், பாதிக்கப்பட்ட மக்கள் கலந்துகொண்டு செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரினர்.

# ‘மிதிகம லசா’ படுகொலை: மூவருக்கு விளக்கமறியல்!

“மிதிகம லசா” என அழைக்கப்படும் வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் லசந்த விக்கிரமசேகர ஹேவத் என்பவர் கடந்த 22 ஆம் திகதி காலை வெலிகம பிரதேச சபை அலுவலகத்தில் வைத்து சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் மூவரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர்கள் மூவரும் இன்று செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.



“மிதிகம லசா” படுகொலையுடன் தொடர்பில் கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ள பிரதான துப்பாக்கிதாரிக்கு மோட்டார்சைக்கிளைக்கொடுத்து உதவி செய்தவர், மோட்டார் சைக்கிளைப் பழுது பார்த்தவர் மற்றும் பிரதான துப்பாக்கிதாரிக்கு உதவிய ஓட்டோ சாரதி ஆகியோரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.




# ஆளணி வெற்றிடங்களை நிரப்புமாறு கோரி யாழ். பல்கலை ஊழியர் சங்கம் போராட்டம்

**(எஸ்.நிதர்ஷன்)**

ஆளணி வெற்றிடங்களை நிரப்புமாறு கோரி யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினைகளுக்கும் மாணவர் நலன் சார்ந்த பிரச்சினைகளுக்கும் பல்கலைக்கழக நிர்வாகம் தீர்வு காண வேண்டும் எனக் கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கல்விசாரா பணியாளர் வெற்றிடங்கள் 355 காணப்படுகின்ற போதிலும் 117 வெற்றிடங்களே நிர்வாகத்தால் கோரப்பட்டுள்ளன. அத்துடன் பல்கலைக்கழக சுற்றுநிருபத்துக்கு முரணாக தனியார் நிறுவனங்களூடாகவும் ஊழியர்கள உள்வாங்கப்பட்டு சேவை ஒப்பந்தத்தினூடாக நியமனம் வழங்கப்படுவது தவறு எனவும் சுட்டிக்காட்டி பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஏற்கனவே இந்த முறைகேடு தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும் பல்கலைக்கழகப் பேரவைக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டும் அவை புறக்கணிக்கப்பட்டதால் இன்று போராட்டத்தில் இறங்கியுள்ளதாகப் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

உடனடியாக வெற்றிடங்கள் அனைத்தும் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் எனவும், இதற்குக் காரணமாக இருந்த அதிகாரிகளுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

போராட்டத்தின் ஆரம்பத்தில் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ.ரஜீவன் ஊழியர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார் .

அத்துடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோரும் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.





# வடக்குக்கான ரயில் சேவை பகுதியளவில் தடைப்படும்!

வடக்கு மாகாண ரயில் போக்கு வரத்து நாளைமறுதினம் வியாழக் கிழமை தொடக்கம் ஒரு வாரத்துக்கு பகுதியளவில் தடைப்படும் என்று அறி விக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ரயில் தண்ட வாளங்களைச் சீர்செய்யும் நடவடிக்கை யும், வடக்கின் ரயில் மார்க்கத்தைத் தரமுயர்த்தும் செயற்பாடுகளும் ஒரு வாரத்துக்கு முன்னெடுக்கப்படவுள் ளன.

இந்தக் காலப்பகுதியில் காலை 10.15 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை பணிகள் முன்னெடுக்கப்படவுள் ளன.

இதையடுத்தே ரயில் சேவைகள் பகுதியளவில் இடைநிறுத்தப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மன்னார் மக்களின்...

அரசு கூறுகின்றது குறித்த திட்டத் துக்கு அனுமதி கொடுக்கப்பட்டுவிட்டது, அது நடைமுறைப் படுத்தப்படும் என்று.

மன்னார் ஆயருடன் ஜனாதிபதி சந் தித்த போதும் இதையே கூறியிருந்தார். ஆனால், மன்னார் ஆயர் இன்றும் மக்க ளின் விருப்பத்தின் பக்கமே இருக்கின்றார்.

உலக நாடுகள் பலவற்றில் இன்றைய காலச் சூழலில் இயற்கை மின் உற்பத் திக்கு முக்கியத்துவம் கொடுத்து வரு கின்றன.

அதனால் அவர்கள் தங்கள் நாடுகளில் மக்கள் வாழிடம் அற்ற பகுதிகளில்தான் இவ்வாறான திட்டங்கை நடைமுறைப் படுத்தி வருகின்றனர்.

இதேநேரம் இந்தத் திட்டம் மன்னாரின் இயற்கையையும் சுற்றுச் சூழலையும் கடல் உயிரினங்களையும் பாதிக்கும் என எமது புவியியல் ஆய்வாளர் நாகமுத்து பிரதீபராஜாவும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, மக்களின் கோரிக்கை இன்று 80 நாள்களைக் கடந்து போராட்டமாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் மக்களின் நலன்களில் நாமும் பங்கா ளர்களாக இருந்து அவர்களது போராட் டத்தையும் கோரிக்கையையும் வலுச் சேர்க்க முடிவு செய்துள்ளோம்." - என்றார்.

### அரசுக்கு எதிரான...

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்காது என்று அந்தக் கட்சி யின் சிரேஷ்ட உப தலைவர் சுஜீவ சேனசிங்க ஊடகங்களிடம் தெரிவித்தார்.

எனினும், அநுர அரசின் ஒடுக்குமுறை மற்றும் ஜனநாயக விரோதச் செயற்பாடு



களுக்கு எதிராக எதிரணிகளுடன் இணைந்து பயணிக்கக் கூடிய இடங்க ளில் ஐக்கிய மக்கள் சக்தி இணைந்து செயற்படும் என்றும் அவர் கூறினார்.

அநுர அரசின் ஊழல், தவறான நிர்வாகம் மற்றும் ஜனநாயக விரோத நடைமுறைகளுக்கு எதிராகவே எதிர்வரும் நவம்பர் 21 ஆம் திகதி நுகேகொடையில் பேரணியை நடத்துவதற்கு ஐக்கிய தேசி யக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்பன திட்டமிட்டுள்ளன.

### தெற்குக்கு...

"தெற்குக்கு கறுப்பு கரையை ஏற் படுத்திவிட்டு வடக்குக்கு வெள்ளை யடிப்பு செய்யும் நடவடிக்கை தற்போது இடம்பெறுகின்றது. பாதாள உலகக் குழு, ஐஸ் மற்றும் போதைப்பொருள் உள்ளிட்ட விடயங்கள் தெற்கு மீது சுமத்தப்படு கின்றது.

ஆனால், வடக்கில் இருந்தே இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகளுக்கு இவர்கள் (குற்றவாளிகள்) தப்பிச் சென்றுள்ளனர். இது பற்றி கதைக்கப்படுவதில்லை. மாறாக தெற்குக்கு கறுப்பு முத்திரை குத் தும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது.

டயஸ் போராக்களை திருப்திப்படுத்து வதற்காகவே இப்படி செய்யப்படுகின்றது." - என்றார்.



# சட்ட விரோத சொத்துச் சேர்ப்புத் தொடர்பில் வவுனியாவிலும் விசாரணைகள் ஆரம்பமாகின

(கி.வசந்தன்)

சட்ட விரோதமான முறையில் சொத்துச் சேர்ப்பு தொடர்பில் வவுனியாவிலும் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சட்டவிரோதமான முறையில் சொத்துச் சேர்த்தவர்கள் தொடர்பில் விசாரணை செய்ய பொலிஸாரின் விசேட பிரிவு ஒன்று அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அந்தப் பிரிவுக்குக் கிடைத்த முறைப்பாட்டையடுத்து யாழ்ப்பாணத்தில் பலருக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், வவுனியாவிலும் மீற்றர் வட்டி மற்றும் போதைப் பொருள் விற்பனை, மக்களிடம் அதிகமான காசோலைகளை பெற்றுக் கொண்டு அதை அடிப்படையாகக் கொண்டு மிரட்டப்பட்டு சொத்துக்களை பெற்றமை, மோசடியான முறையில் காணிகளை அபகரித்துட் சொத்துச் சேர்த்தமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பொலிஸார் சிலரிடம் வாக்க மூலங்களைப் பெற்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை, வவுனியாவில் அதிகரித்து வரும் மீற்றர் வட்டி மற்றும் போதைப் பொருள் மாபியாவுக்கு எதிராக மக்கள் தகவல்களை தமக்கோ அல்லது பொலிஸாருக்கோ வழங்கினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பச்சிளைப்பள்ளி பிரதேச சபை வரவு - செலவுத் திட்டம் தயார்!

## மக்கள் பார்வையிட்டு மாற்றங்களைப் பரிந்துரைக்கலாம்



(பூ.லின்ரன்)

பச்சிளைப்பள்ளி பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான மக்கள் பங்களிப்பான வரவு – செலவு திட்டன் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பச்சிளைப்பள்ளி பிரதேச சபையின் முதலாவது வாசிப்பு நிறைவடைந்து மக்கள் பார்வைக்காக இன்று தொடக்கம் பொது இடங்களில் காட்சி படுத்தப்படவுள்ளது.

எனவே பச்சிளைப்பள்ளி பிரதேச வாழ் மக்கள் பச்சிளைப்பள்ளி பிரதேச சபை தலைமை அலுவலகத்திலும் மற்றும் பச்சிளைப்பள்ளி பிரதேச செயலகத் தலைமை அலுவலகத்திலும் மற்றும் பச்சிளைப்பள்ளி பிரதேச சபையினுடைய முகமாலை மற்றும் இயக்கச்சி போன்ற உப அலுவலகங்களிலும் தங்களுடைய வரவு – செலவுத் திட்டத்தின் விடயங்களைப் பார்வையிட முடியும்.

அவ்வாறு பார்வையிட்டு தங்களுடைய வரவு – செலவு திட்டத்தின் ஏதாவது மாற்றங்கள் செய்ய வேண்டி இருப்பின் அவற்றை எழுத்து மூலமாக பச்சிளைப் பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் சமர்ப்பிக்கும் போது அவற்றை நாங்கள் பரிசீலித்து, கவனத்தில் எடுத்து, திருத்தப்பட்ட வரவு – செலவு திட்டத்தை நாங்கள் சமர்ப்பிக்க கூடியதாக இருக்கும்.

குறிப்பாக இன்று 28ஆம் திகதி தொடக்கம் வரும் 10 ஆம் திகதி வரை இந்த வரவு – செலவு திட்டத்தை மேற்குறித்த அலுவலகங்களில் பார்வையிட்டு மக்கள் தங்களது கருத்துக்களை பதிவிட முடியும். – என பச்சிளைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சு.சுரேன் தெரிவித்துள்ளார்.

## நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


# எதிர்ப்பு வரும்

இந்தியாவின் இராமேஸ்வரத்துக்கும் இலங்கையின் தலைமன்னாருக்கும் இடையில் புதிய கப்பல் பாதையை ஆரம்பிப்பது தொடர்பில் இருநாட்டு அரசுகளுக்கும் இடையில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

மும்பையில் நேற்று வரை நடைபெறறு முடிந்த 2025 ஆம் ஆண்டு இந்திய கடல்சார் வாரத்தின் போது, இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளாது

இந்தியாவின் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து அமைச்சர் சர்பானந்த சோனோவால், இலங்கையின் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அனுர கருணாதிலக ஆகியோருக்கு இடையில் நடைபெற்ற சந்திப்பில் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டிருக்கின்றது.

இந்தப் புதிய கப்பல் பாதையைத் தொடங்குவதன் மூலம் இந்தியா - இலங்கை கடல்சார் இணைப்பை விரிவுபடுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்தும் இரு நாட்டு அமைச்சர்களும் ஆராய்ந்துள்ளனர்.

“இலங்கை தலைமன்னாருக்கு கப்பல் போக்கு வரத்தை துவங்க வசதியாக, ராமேஸ்வரம் துறைமுகத்தை மேம்படுத்த நிதி வழங்க வேண்டும்” என, இந்திய மத்திய அரசுக்கு தமிழகத்தின் சார்பில் அதன் நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

நாகப்பட்டினம் துறைமுக மேம்பாட்டுக்கு, இந்திய மத்திய அரசு பெருமளவு நிதி வழங்கியுள்ளமையால் நாகப்பட்டினம் - காங்கேசன்துறை கப்பல் சேவையை நடத்துவதற்கான சூழல் ஏற்பட்டது.

இப்படி வடக்கு இலங்கையையும் தென்னிந்தியாவையும் இணைப்பதற்கான பல்வேறு போக்குவரத்துத் திட்டங்களில் இந்திய மத்திய அரசு முனைப்புடன் ஈடுபாடு காட்டி வருகிறது.

இதற்காக தன்னுடைய பக்கத்தில் உள்ள துறைமுகங்கள் மற்றும் இறங்கு தளங்களை மாத்திரமன்றி இலங்கை தரப்பில் இருக்கும் தளங்களையும் தனது நன்கொடைகள் மூலம் அபிவிருத்தி செய்வதற்கு இந்தியா தானாகவே முன்னின்று உதவ முன்வந்துள்ளது.

பலாலி சர்வதேச விமான நிலையம், காங்கேசன்துறை துறைமுகம் போன்றவற்றின் மேம்பாட்டுக்கும் அபிவிருத்திக்கும் கணிசமான உதவியை நன்கொடையாக தந்து, அவற்றை அபிவிருத்தி செய்வதன் மூலம் இருநாட்டு பயணிகள் போக்குவரத்தை மேம்படுத்துவதில் இந்தியத் தரப்பு அதிக கரிசனை கொண்டு செயற்படுகின்றது.

ஆனால் இத்தகைய போக்குவரத்து மார்க்கங்கள் மேம்பட்டால் பொருளாதார ரீதியில் இலங்கையின் வட பகுதி - தமிழரின் தாயகம் - நன்கு அபிவிருத்தி அடைந்து சுபீட்சம் பெறும் என்பதை சகித்துக் கொள்ள முடியாத தென்னிலங்கை இனவாத சக்திகள் இவற்றுக்கு முட்டுக்கட்டை போட்டு வருகின்றன.

பலாலி மற்றும் காங்கேசன்துறை அபிவிருத்தி நடவடிக்கைகள் இத்தகைய முட்டுக்கட்டை காரணமாக தாமதமாகியமைப்பற்றி இப்பத்தியில் பல தடவைகள் சுட்டிக்காட்டிவிட்டோம்.

இப்போது தலைமன்னார் ஊடான புதிய கப்பல் பாதையை ஆரம்பிப்பது என்பது 40 ஆண்டுகளுக்கு முந்திய பழைய போக்குவரத்து மார்க்கத்தை மீளத் தொடங்குவதுதான். என்றாலும் அதற்கும் புதிதாக மேலும் சில மதவாத சக்திகள் எதிர்ப்புக் காட்டத் தொடங்கிவிடும் என எதிர்பார்க்கலாம். தங்கள் பிரதேசத்தில் தங்களின் மதவாத மேலாதிக்கத்தை உறுதிப்படுத்தும் அரசியல் இலக்கில் இத்தகைய எதிர்ப்புக்கள் மத அங்கிகள் அணிந்தவர்களால் இலங்கைப் பக்கத்தில் முன் வைக்கப்படும் என்பது தெரிந்ததே. அவற்றை எதிர்கொள்வது குறித்தும் ஆரம்பத்திலேயே திட்டமிட்டு சிந்திப்பது நல்லது.




# குருக்கள்மடம் புதைகுழி வழக்கு ஒத்திவைப்பு



(பாறுக் ஷிஹான்)

மட்டக்களப்பு குருக்கள்மடம் புதைகுழி தொடர்பில் தொடர்புடைய அனைவரையும் எதிர்வரும் 17ஆம் திகதி நீதிமன்றிற்கு ஆஜராகுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளமையுடன் வழக்கு எதிர்வரும் நவம்பர் 17ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்றுத் திங்கட்கிழமை களுவாஞ்சிகுடி நீதிவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் குரல்கள் இயக்கத்தின் சட்டத்தரணிகளான எஸ்.எச்.எம்.மனாறுதீன், முபாறக் முஅஸ்ஸம் உட்பட சட்டத்தரணிகள் ஆஜராகியிருந்தனர்.

குருக்கள்மடம் புதைகுழி தொடர்பில் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான நிதி தொடர்பில் தாமதங்களை கவனத்தில் கொண்ட நீதிவான் வழக்குடன் தொடர்புடைய பங்காளர்கள் அனைவரும் எதிர்வரும் 17ஆம் திகதி 2.00 மணியளவில் நீதிமன்றுக்கு வருகைதந்து கலந்துரையாடலை மேற்கொண்டு ஒரு தெளிவான தீர்மானத்தை எடுப்பதற்காக உரிய கட்டளையிசொ பிறப்பித்தார் என வழக்கு சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ்.எச்.எம்.மனாறுதீன் தெரிவித்தார்.


# கவிஞர் வைரமுத்துவிடம் ‘துருவேறும் கைவிலங்கு’

தென்னிலங்கையின் சிறையில் 16 ஆண்டு காலங்களாக தடுத்து வைக்கப்பட்டு ஆயுள் தண்டனை அனுபவித்து வந்த ஈழத்தமிழ் அரசியல் கைதி விவேகானந்தனூர் சதீஸ், நெருக்கடிமிகு சிறைக்குள் இருந்து எழுதிய, ‘துருவேறும் கைவிலங்கு’ எனும் மெய்யாவன நூல், பிரபல தென்னிந்திய கலைஞரான கவிஞர் வைரமுத்துவிடம் வழங்கப்பட்டுள்ளது.

‘குரலற்றவர்களின் குரல்’ அமைப்பின் ஒருங்கிணைப்பாளர், மு.கோமகன் இந்த நூலை கவிஞர் வைரமுத்துவிடம் வழங்கினார்.

20 முதல் 30 ஆண்டுகளுக்கும் மேலாக இன்னும் பல தமிழ் அரசியல் கைதிகள் சிறை வைக்கப்பட்டிருக்கின்ற நிலையில், தென்னிலங்கையின் உயர்ந்த சுற்றுமதில் சுவர்களுக்குள் துயர் அனுபவித்து வருகின்ற எமது உறவுகளின் வெளித்தெரியாத பல உண்மைகளின் ‘மெய்ச் சாட்சியமாக’ பார்க்கப்படுகின்ற ‘துருவேறும் கைவிலங்கு’ எனும் இந்த ஆவண நூல், அனைத்துத் தரப்புகளதும் கூர்ந்து அவதானிப்புக்கு உட்படுத்தவேண்டியது காலத்தின் அவசியமாகிறது.

அந்த வகையில், “நீண்ட நெடும் போருக்கு பின்னரும் கூட, எமது தமிழினம் விடுதலைக்காக ஏங்குகின்ற வலி சுமந்த வாழ்வை அனுபவித்து வருகின்றது” என்கின்ற கனதிமிகு செய்தியினை, “ஈழத் தமிழினத்தின் விடுதலைப் பயணத்தில் பக்கத்து இருக்கைப் பங்காளியாக உறவுபூண்டு வருகின்ற தென்னிந்திய தேசத்துக்கு உரத்துச் சொல்ல வேண்டும்” என்பதற்காக ஈழத்தமிழ் திரைப்படத் தொடக்க விழா நிகழ்வுக்கு வருகைதந்திருந்த கவிஞர் வைரமுத்துவை நேரில் சந்தித்த ‘குரலற்றவர்களின் குரல்’ அமைப்பு, இந்த நூலை அவரிடம் கையளித்துள்ளது.



நூலை கையேற்ற கவிஞர், “இந்த நூலின் தலைப்பே கைதிகளின் அவலக் கதியை பறைசாற்றுகின்றது” என ஆதங்க மடைந்ததுடன் தெரிவித்ததுடன் கைதிகளின் நிலை பற்றியும் கேட்டறிந்தார்.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998





# பொத்துவில் கோமாரியில் இந்திய அரசால் நிர்மாணிக்கப்பட்ட நீர் சுத்திகரிப்பு நிலையம், பஸ் தரிப்பு நிலையம் திறந்துவைப்பு

(கனகராசா சரவணன்)

கிழக்கு மாகாணம் பொத்துவில் பிரதேசத்திலுள்ள கோமாரி களுகொள்ள பிரதேசத்தில் இந்திய அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட சுத்திகரிப்பு நிலையம் மற்றும் பஸ் தரிப்பு நிலையத்தை இன்று செவ்வாய்க்கிழமை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாசம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்து மக்களிடம் கையளித்தார்.

கோமாரி மக்கள் தமது குடிதண்ணீர் வசதிகளை செய்து தருமாறு இந்திய அரசிடம் கோரியமைக்கி அமைய நீண்டகாலமாக குடிதண்ணீர் இன்றி பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் களுகொள்ள பிரதேச மக்களுக்கு சுத்தமான குடிதண்ணீரை வழங்கும் திட்டத்தின் கீழ் பல லட்சம் ரூபா பெறுமதியான நீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றையும் அந்த பகுதியில் பஸ் தரிப்பு நிலையம் ஒன்றையும் இந்திய மக்களின் நிதி பங்களிப்புடன் புனர்நிர்மாணித்துள்ளனர்.

இதனை வைபவ ரீதியாக திறந்து வைக்கும் நிகழ்வு இன்று இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர், பிரதேச செயலாளர் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டு நாடா வெட்டி திறந்து வைத்தமையுடன் பெயர் பலகைகளை திரை நீக்கம் செய்து திறந்து வைத்தனர்.











# எமது முன்னோர்களின் கை மருத்துவக் கலை!



சௌந்தராஜன் துர்ஷாயினி
(மூன்றாம் வருடம்,
ஊடகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்)

இருண்டு கிடந்த உலகம் தற்போது அறிவியலின் வளர்ச்சியால் ஒளிமயமாக மாறிவருகின்றது. என்னதான் நாம் வாழும் உலகில் நவீனமயமான மருத்துவத்தில் புதிய புதிய முறைகள் கண்டு பிடிக்கப்பட்டாலும் எமது முன்னோர்கள் காலம் காலமாகப் பேணி வந்த கை மருத்துவ முறைகளை நாம் பொய் என்று கூறி புறக்கணிக்க முடியாது.

மனித வாழ்க்கையில் ஆரோக்கியம் மிகவும் முக்கியமானது. தற்காலத்தில் சிறிய உடல் நலக் குறைகள்ஏற்பட்டவுடன்அனைவரும் உடனே மருத்துவரிடம் செல்கின்றோம் இப்படிப்பட்ட சமயங்களில் பழமையான அனுபவத்தின் அடிப்படையில் வீட்டிலேயே செய்யப்படும் சிகிச்சை முறைகளே வீட்டு வைத்தியம் எனப்படுகிறது.

எமது முன்னோர்கள் தலைமுறையாய் பின்பற்றி வந்த அறிவின் பலன் ஆகும். இது கைமருத்துவம் அல்லது கைவைத்தியம் என்றும் கூறப்படுகின்றது.

வீட்டு வைத்தியம் என்பது இயற்கை மூலிகைகள், சமையல் பொருட்கள் மற்றும் தினமும் பயன்படுத்தும் உணவுப் பொருள்களைப் பயன்படுத்தி செய்யப்படும் சிகிச்சையாகும். இது குறைந்த செலவில், இலகுவாக, பக்க விளைவில்லாமல் எமக்கு பயனளிக்கக் கூடியது.

பெரும்பாலும் உடலின் சிறிய பிரச்சினைகளுக்கு இது மிகப் பொருத்தமானது எனவே நாம் இங்கு சில கைமருத்துவங்களை நோக்குவோம்.

சளி, இருமலுக்கு மஞ்சள் கலந்த பால், துளசி இலைச் சாறு, இஞ்சி தேநீர் குடித்தல், தூதுவளை இலைச்சம்பல் உண்ணுதல், ஒடியல் மாவுடன் மஞ்சள்தூள் மற்றும் உழுத்தம்மா இணைத்து களிசமைத்து உண்ணுதல். சிறு குழந்தைகளுக்கு கற்பூரவள்ளி, இலைச் சாறு கொடுத்தல். சளிநீங்க தேசி இலையுடன் துளசி, தேயிலை, கறிமஞ்சள், நீர் இணைத்து வேது பிடித்தல், தொண்டை வலிக்கு வெந்நீரில் உப்பு கலந்து குடித்தல், வயிற்று வலிக்கு இஞ்சி சாறு அல்லது எலுமிச்சைச் சாறு சேர்த்த வெந்நீர்குடித்தல், வெந்தயத்தை வெதுவெதுப்பான நீரில் ஊற வைத்து குடித்தல், தலைவலி நீங்க புதினா எண்ணெய் அல்லது இலவங்கப்பட்டைத் தூள் தடவுதல், இஞ்சி தேநீர் அருந்துதல். காய்ச்சலுக்கு துளசி, கருப்பட்டி, சுக்கு சேர்த்து கசாயம் குடித்தல், மிளகு, மல்லி, சின்னச் சீரகம், ஆடாதோடை சேர்த்து குடிநீர் அவித்து குடித்தல், தோல் பிரச்சினைகளுக்கு மஞ்சள் மற்றும் எலுமிச்சைச்சாறு கலந்த தைலம் தடவுதல், பேன் தொல்லைக்கு சிறிது சீத்தாப்பழ விதை, வெந்தயம், நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் சேர்த்து எண்ணெய் காய்ச்சி வைத்தல்.

பொடுகு தொல்லைக்கு வெந்தயம் ஊற வைத்து அரைத்து தலையில் தேய்த்து முழுகுதல், காரல் இலையை இடித்து வெயிலில் சிறிது நேரம் வைத்து விட்டு தலையில் தேய்த்து ஒரு பதினைந்து நிமிடம் கழித்து நீராடுதல்.

வாந்தி பேதிக்கு மிளகு வறுத்து பின்னர் அதனை நீர் உற்றி அவித்து அதனுடன் தேன் கலந்து குடித்தால் வாந்தி நிவர்த்தி ஆகும். பேதிக்கு மாதுளம் அல்லது மங்குஸ்தான் பழத் தோலை அவித்துக் குடித்தல், வெந்தயம் வறுத்து பொடியாக்கி அதனுடன் தேன் கலந்து விழுங்குவதன் மூலம் பேதி கட்டுப்படும்,தேநீரும் எலுமிச்சை சாறு கலந்து குடித்தல்.

வயிற்றுப்புழு நீங்க வேப்பம் பட்டை அவித்து குடித்தல், சிறிது ஒற்றைப் பனங் கள்ளு குடித்தல், கொய்யா இலை, வேப்பிலை சேர்த்து அவித்து குடிநீர் குடித்தல்.

முகப்பரு நீங்க பயற்றம்மா பூசுதல், கஸ்தூரி மஞ்சள் பூசுதல், தக்காளியுடன் சிறிது சீனி சேர்த்து முகத்தில் பூசுதல், வெட்டுக்

தொடர்ச்சி▼



# எமது முன்னோர்களின் கை மருத்துவக் கலை!

தொடர்ச்சி▲

காயத்துக்குக் கறிமஞ்சள் வைத்து கட்டுதல், ஆணி குத்தல் மற்றும் பிசுங்காண் குத்தலுக்கு வேற் கொம்புமாவுடன் கறிமஞ்சள் சேர்த்துக் கட்டுதல், பனைமட்டைத் தூசு வைத்து கட்டுதல்.

உடல் வலிக்கு காவிளய் செடியை அவித்து குளித்தல். கைகால் மூட்டு வலிக்கு நல்லெண்ணெய்யுடன் மஞ்சள் கலந்து சூடாக்கி மூட்டுக்களில் உருவுதல்.

மூலநோய்க்கு கருணைக் கிழங்கினை நெய்யில் பொரித்து உண்ணல். வயிற்றுப்புண் நீங்க பாதாம் ஊறவைத்து வெறும் வயிற்றில் சாப்பிடுதல். உடல்சூட்டைத் தணிக்க ஆமணக்கு எண்ணெய், நல லெண்ணெய் தடவி குளித்தல், வெந்தயம்,வெங் காயம் சேர்த்து குழம்பு செய்து உண்ணல்.

வீட்டு வைத்தியம் நம் பாரம்பரிய மருத்துவத்தின் அடையாளமாகும். இது உடல் நலத்தை மேம்படுத்துவதோடு, இயற்கையுடன் நம் உறவையும் வலுப்படுத்துகிறது. ஆனால், கடுமையான அல்லது நீண்டகால நோய்களுக்கு வைத்தியர் ஆலோசனையைப் பெறுவது அவசியம்.

சரியான முறையில் பின்பற்றப்பட்டால் வீட்டு வைத்தியம் நம் வாழ்க்கையில் ஆரோக்கியம் மற்றும் அமைதியை வழங் கும் ஒரு சிறந்த வழிமுறையாகும். எனவே நாம் முன்னோர்களால் பின்பற்றப்பட்ட கை வைத்தியத்தை அழியாவண்ணம் நம் அடுத்த சந்ததியினருக்கு பாதுகாத்துக் கொடுக்க வேண்டும்.



# அதிகரித்து வரும் வீதி விபத்துக்களை தடுக்கும் விசேட செயற்றிட்டம் மட்டுவில்





(மட்டக்களப்பு நிருபர்)

அதிகரித்து வரும் வீதி விபத்துக்களைத் தடுக்கும் விசேட செயற்றிட்டம் மட்டக்களப்பில் முன்னெடுப்பு.

அரசின் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத் திட்டத்தின் ஊடாக கிழக்கு மாகாணத்தில் அதிகரித்துவரும் வீதி விபத்துக்களை தடுக்கும் விசேட செயற்றிட்டம் மட்டக்களப்பில் நேற்று திங்கட்கிழமை (27) முன்னெடுப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களைத் தடுக்கும் முகமாக கிழக்கு மாகாண ஆளுநரின் உத்தரவுக்கு அமைவாக தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கு அமைய மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் திங்கட்கிழமை காலை மாவட்ட போக்குவரத்து திணைக்களம் மற்றும் மட்டக்களப்பு தலைமையக நெடுஞ்சாலை போக்குவரத்து பொலிஸார் இணைந்து விசேட வீதி பரிசோதனையை முன்னெடுத்தனர்.

இதன்போது பிரதான வீதி ஊடாக பயணிக்கும் வாகனங்கள், மோட்டார் போக்குவரத்து திணைக்கள அதிகாரிகளால் விசேட பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

போக்குவரத்து பாவனைக்கு உரிய முறையில் காணப்படாத வாகனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கும் முகமாக வாகனங்கள் முழுமையாக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அவற்றின் பிரேக், டயர்கள், சிக்னல், லைற், என்பன பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு பாதுகாப்பற்ற முறையில் காணப்படும் வாகனங்களை திருத்தி அமைப்பதற்காக 14 நாள்கள் கால அவகாசம் வழங்கப்பட்டது.

இதனை உரிய முறைமையைக் கடைபிடிக்காத வாகன சாரதிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளன. இன்றைய பரிசோதனையின் போது சுமார் நூற்றுக்கணக்கான வாகனங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இந்த விசேட பரிசோதனை செயற்றிட்டத்தின்போது மட்டக்களப்பு தலைமையக போக்குவரத்து பொலிஸ் பொறுப்பு அதிகாரி மற்றும் மோட்டார் திணைக்கள உயர் அதிகாரிகளும் போக்குவரத்துப் பொலிஸாரும் கலந்து கொண்டிருந்தனர்.



# பொலித்தீன் உபயோகத்தை கட்டுப்படுத்த முடியும்...!

**கோபாலகிருஷ்ணன் யாழினிப்ரியா**
**(ஊடகக் கற்கைகள்,**
**யாழ். பல்கலைக்கழகம்)**

பொலித்தீன் உபயோகத்தை முற்றாக இல்லாமலாக்க முடியாது. ஆனால் நாம் நினைத்தால் கட்டுப்படுத்தல்லாம்.

யாழ். குடாநாட்டின் தனித்துவமான புவியியல், சனத்தொகை அடர்த்தி மற்றும் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பு என்பன, இங்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு விவகாரங்களை மிகவும் முக்கியமானதாக ஆக்கியுள்ளன. இதில், பொலித்தீன் கழிவுகளின் தாக்கம் முதன்மையான இடத்தைப் பெறுகிறது.

யாழ்ப்பாண மாநகர சபையாலும், மத்திய அரசாங்கத்தாலும் பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்த பல விதிமுறைகள் அமுல்படுத்தப்பட்ட போதும், “என்னதான் நீங்கள் கூறினாலும் நாங்கள் செய்வதைத்தான் செய்வோம்” என்ற மனப்பான்மை மக்கள் மத்தியில் ஆழமாக வேரூன்றியிருப்பது, இந்த முயற்சிகளின் வெற்றிக்கு பெரும் சவாலாக உள்ளது. சட்டம், தண்டனை என்பதையும் கடந்து, ஏன் ஒரு சமூகப் பொறுப்புணர்வுடன் மக்கள் தங்களைத் தாங்களே மாற்றிக்கொள்ள வேண்டும்.

பொலித்தீன் பயன்பாடு இன்றைய சமுதாயத்தில் பெரும் சுற்றுச்சூழல் பிரச்சினையாக மாறியுள்ளது. யாழ்ப்பாணம் போன்ற வடக்கு மாகாணத்தின் முக்கிய நகரங்களில் பொலித்தீன் கட்டுப்பாட்டை முறையாக ஊக்குவிப்பது காலத்தின் அவசியமாகும்.

யாழ்ப்பாணத்தில் தினசரி வாழ்க்கையில் பொலித்தீன் பைகள் அதிகமாக பயன்படுத்தப்படுகின்றன. இவை மண்ணில் கலக்காமல் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் இருக்கின்றன. மழைநீர் வடிகால் அமைப்புகளில் பொலித்தீன் சேர்வதால் நீர்த்தேக்கம் ஏற்பட்டு வெள்ளப் பிரச்சினைகள் உருவாகின்றன.

நிலத்தடி நீரும் மண்ணும் பொலித்தீன் கழிவுகளால் மாசுபடுகின்றன. கடலோர பகுதிகளில் பொலித்தீன் குப்பைகள் கடல் வாழ் உயிரினங்களுக்கு ஆபத்தாக அமைகின்றன. மேலும், பொலித்தீனை எரிக்கும்போது வெளிவரும் நச்சு வாயுக்கள் காற்று மாசுபாட்டை அதிகரித்து சுகாதாரப் பிரச்சினைகளை உருவாக்குகின்றன.

யாழ்ப்பாணம் ஒரு வரலாற்று சிறப்புமிக்க நகரம் மட்டுமல்ல, இயற்கை வளங்கள் நிறைந்த பகுதியும் கூட. நல்லூர், நயினாதீவு, யாழ்ப்பாண நூலகம் மற்றும் கோட்டை போன்ற முக்கிய இடங்கள் சுற்றுலா பயணிகளைக் கவர்கின்றன. இந்த அழகிய பகுதிகளை பொலித்தீன் மாசுபாட்டிலிருந்து காப்பாற்ற வேண்டியது அவசியம்.

விவசாயம் சார்ந்த பொருளாதாரமும் பாதிக்கப்படுகிறது. மண்ணில் சேரும் பொலித்தீன் விவசாய விளைச்சலை குறைக்கிறது. மேலும், மக்களின் பாரம்பரிய வாழ்க்கை முறையும் சுற்றுச்சூழல் நேசமும் பொலித்தீன் கட்டுப்பாட்டை ஏற்றுக்கொள்ள ஏதுவாக அமையும்.

யாழ்ப்பாண மாநகர சபை மற்றும் பிரதேச செயலகங்கள் பொலித்தீன் பயன்பாட்டை தடை செய்யும் சட்டங்களை அமல்படுத்தி உள்ளன. இருப்பினும் அவை மக்களான எங்களால்தான் நடைமுறையில் பின்பற்றப்படவேண்டும்.

பொலித்தீன் கட்டுப்பாடு என்பது எதிர்கால சந்ததியினருக்கு நாம் செய்யும் முதலீடும் கூட. யாழ்ப்பாணம் ஒரு பசுமையான, சுத்தமான நகரமாக மாற வேண்டுமானால், இன்றே பொலித்தீன் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கத் தொடங்க வேண்டும். மக்கள் அனைவரும் இணைந்து செயற்படும்போது மட்டுமே இந்த இலக்கை அடைய முடியும். யாழ்ப்பாணத்தின் பாரம்பரியமும் இயற்கை அழகும் பாதுகாக்கப்பட வேண்டுமானால், பொலித்தீன் ஒழிப்பு இன்றியமையாததாகும்.

எவர் எதைக்கூறியபோதும் இவற்றின் பாவனை குறைந்து செல்வதாக இல்லை. இதற்கு எமது சோம்பல் மனப்பான்மையும் சுற்றுச் சூழல் மீதான அக்கறையின்மையுமே காரணம். குப்பைகளை நிர்வகிப்பது அரசின் கடமை என்றாலும், தனிநபர்கள் ஒவ்வொருவரும் இருக்கும் பொறுப்பை மதித்துச் செயற்படுதல் வேண்டும்.



# தங்கக்கலை தோட்ட அலுவலகம் மூடப்படுவதற்கு எதிராக தொழிலாளர் வேலை நிறுத்தப் போராட்டம்

ஹட்டன் பிலான்டேஷனின் நிர்வாகத்துக்கு உட்பட்ட தங்கக்கலை தோட்ட அலுவலகம் மூடப்பட்டு ஊவாக்கலை தோட்டத்துக்கு மாற்றப்படுவது தொடர்பாக தொழிலாளர்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து, நேற்று சுமார் 500 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கேம்பிரி மேற்பிரிவு, கேம்பிரி கீழ் பிரிவு, தங்கக்கலை மேற்பிரிவு, கெல்சி தங்கக்கலை உள்ளிட்ட பிரிவுகளில் பணி புரியும் தொழிலாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தோட்ட முகாமையாளருடன் நடைபெற்ற கலந்துரையாடலில், அகில இலங்கை தோட்ட தொழிலாளர் சங்க பிரதிநிதிகள், தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்று தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைக்கு ஆதரவாக வலியுறுத்தினர்.

எனினும், முகாமையாளரை அழைத்து மக்கள் பிரதிநிதிகள் கலந்துரையாடிய போதிலும் நிர்வாகம் எந்தவிதமான சுமூகமான தீர்வுக்கும் இணக்கம் தெரிவிக்கவில்லை. இதனால் தொழிலாளர்கள் அதிருப்தியடைந்த நிலையில் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளனர்.

இது தொடர்பில் தொழிலாளர்கள் தெரிவிக்கையில்,

தங்கக்கலை அலுவலகம் மூடப்பட்டு மாற்றப்படுவது எங்கள் வாழ்வாதாரத்துக்கும், பணியிட வசதிகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். நியாயமான தீர்வு கிடைக்கும்வரை வேலை நிறுத்தம் தொடரும் எனத் தெரிவித்தனர்.

நிலைமைக்கு அமைவாக லிந்துலை பொலிஸ் அதிகாரிகளும் சம்பவ இடத்துக்கு வரவழைக்கப்பட்டிருந்தனர்.

தொழிலாளர்கள் தங்களின் உரிமை, வேலை பாதுகாப்பு, மற்றும் வாழ்வாதாரத்தைக் காக்கும் நோக்கில் உறுதியுடன் இந்த போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.



# புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையின் சிரார்த்ததின நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை!

(பழுவூரான்)

தேசிய வீரர் இலக்கிய கலாநிதி புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளையின் 47ஆவது சிரார்த்ததின நிகழ்வும், நினைவுப் பேருரையும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (02) மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்ற பவளகாந்தன் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தேசிய வீரர் இலக்கிய கலாநிதி புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை நினைவுப்பணி மன்றத் தலைவர் கலாநிதி ஏ.செல்வேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், மட்டக்களப்பு மாநகர நகரபிதா சிவம் பாக்கியநாதன் பிரதம விருந்தினராகவும், முன்னாள் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினரும், மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவருமான சீனித்தம்பி யோகேஸ்வரன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்க் கற்கைகள் துறைப் பேராசிரியர் சி.சந்திரசேகரம் நினைவுப் பேருரையாற்றவுள்ளார்.

இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் மட்டக்களப்பு முதலியார் வீதியில் அமைந்துள்ள புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளையின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.



# மலையும் கடலும் சொல்லும் கதை நோக்கிய பயணம்...!



ஜெகன் ஹிமாத்ரி
(ஊடகக்கற்கைகள் துறை,
மூன்றாம் வருடம்,
யாழ். பல்கலைக்கழகம்)

கதிரவன் உதிக்கும் கிழக்கில் கடல் தழுவும் மலைச்சரிவின் மத்தியில் உள்ளது திருகோணமலை. இது இயற்கை அழகாலும் வரலாற்றுப் பெருமையாலும் ஆன்மீகத்தில் புகழ்பெற்றதாகவும் அதிலும் குறிப்பாகத் திருக்கோணேஸ்வரர் ஆலயம் இந்த நகரின் இதயத் துடிப்பாகக் காணப்படுகிறது.

சமீபத்தில் திருக்கோணேஸ்வரர் ஆலயத்துக்குச் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது அந்தப் பயணம் என் வாழ்வில் என்றும் மறக்க முடியாத அனுபவமாக பதிந்து விட்டது.

அந்த நாள் ஒரு சனிக்கிழமை காலை நானும் எனது நண்பர்களும் ஒரு சிறிய வாகனத்தில் திருகோணமலை நோக்கி பயணமாகினோம் செல்லுகின்ற வழியெல்லாம் பசுமையான வயல்கள் கடற்காற்று அழகு என அனைத்தும் ஒரு புதிய உற்சாகத்தை அழித்தன. எங்களின் பயணத்தின் போது வழியில் சில சிறிய கிராமங்களை கடந்து சென்றோம். மக்களின் முகங்களில் காணப்பட்ட அந்த இயல்பான புன்னகையும் கடல் காற்றில் வீசும் தென்னை மரங்களின் இசையும் அந்தப் பாதையை ஒரு கவிதை போல மாற்றின. இயற்கையை ரசித்தபடியே மதிய வேளையில் நாங்கள் திருகோணமலையை அடைந்தோம்.

நகரின் அமைதியான சூழல் கடல் மனமும் மலைச்சரிவுகளின் காட்சியும் மனதை ஒய்வுறச் செய்தன. முதலில் கடற்கரை அருகே உள்ள ஒரு சிறிய உணவகத்தில் மதிய உணவை உட்கொண்டோம். பயணத்தின் களைப்பும் பசியும் ஒன்று சேர மனம் அலைந்தது.

திருகோணமலை என்றாலே கடல் உணவுக்குப் பிரபலமானதாகும். சென்ற களைப்பில் உணவை உண்டு விட்டு மாலை நேரத்தில் கோவிலுக்குச் செல்ல முடிவு செய்தோம்.திருக்கோணேஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளதே மலையின் உச்சியில், ஊரின் பெயருக்கு ஏற்றாற் போல சிவனின் கோவிலும் காணப்படுகின்றது. சிறிய மலைப் பகுதியின் அடிவாரத்தில் வாகனத்தை கீழே நிறுத்திவிட்டு மேலே செல்லும் பாதையில் நடக்க முடிவு செய்தோம் அந்தப் பாதை கல்லால் அமைக்கப்பட்டிருந்தது. சரிவான நிலையில் செல்லும் பாதையின் உச்சியிலேயே பெரிய சிவன் சிலை ஒன்று தூரத்தில் கண்ணில் பட்டது. சுற்றிவர கடல் நீலமும் பச்சையும் கலந்து காட்சி அளிப்பது தெய்வீகமான அமைதியை மனதில் விதைத்தது.

மலையேறும் வழிகளில் மனதைக் கவரும் வகையில் விலங்குகளும் பாதை முழுவதுமாக இரு பக்கமும் கடைகளும் என மனதை ஒருவித உணர்வுக்குள் கொண்டு சென்றது. மான், குரங்கு, மயில் போன்றவை சகஜமாக மனிதர்களுக்கு அருகே நடமாடுவதை கண்டு வியந்து போனேன். மான் என்றால் யாருக்குத் தான் பிடிக்காது நான் மட்டும் என்ன விதிவிலக்கா? அருகில் சென்று பார்வையிட்டேன். கோயிலுக்கு வரும் பக்தர்கள் செல்லும் வழிகளில் பல கடைகள் எம்மை அழைப்பது போலவே இருந்தது. கூட்டம் கூட்டமாக ஒவ்வொரு கடையிலும் மக்கள் திரண்டனர். பல பொருள்கள் விதவிதமாய் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. அவற்றை எல்லாம் கடந்தபடி மலையின் உச்சியை அடைந்தோம். மலையின் உச்சியில் உயர்ந்து நிற்கும் திருக்கோணேஸ்வரர் ஆலயத்தைக் காணும் தருணம் சொல்லொண்ணாத அனுபவமே.

ஆலயத்தின் மாளிகை மின்ன கும்பம் சூரிய ஒளியில் தங்க நிறமாய் பிரகாசித்தது. கடலும் ஆலயமும் ஒன்றை ஒன்றுத் தழுவுவது போல அத்தனை அழகாக காட்சியளித்தன. திருக்கோணேஸ்வரர் ஆலயம் சிவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. திருகோணேஸ்வரர் என்றால், திருகோணமலைக்கு உரியது எனப்

தொடர்ச்சி▼

# மலையும் கடலும் சொல்லும் கதை நோக்கிய பயணம்...!

**தொடர்ச்சி▲**

பொருள் வரலாறுகளின் படி இந்த ஆலயம் 2000 ஆண்டுகளுக்கு முன்பே இருந்ததாக கூறப்படுகிறது.

இது இலங்கையின் பழமையான சிவாலயங்களில் ஒன்றாகும். இந்த ஆலயத்தின் கட்டடக்கலை மிக அழகாக இருந்தது. கோபுரம் உயரமாகவும் அதில் வடிவமைக்கப்பட்ட சிற்பங்கள் அனைத்தும் தெய்வீக அர்த்தம் கொண்டவையாகக் காட்சியளித்தன.

சிவபெருமான், பார்வதி, விநாயகர், முருகன் மற்றும் நந்தி என இவை அனைத்து உயிர்ப்புடன் செதுக்கப்பட்டிருந்தன. அங்கிருந்து கீழே பார்த்தால் இந்தியப் பெருங்கடல் பச்சை நீல நிறத்தில் பரப்பாக பரவியிருந்தன. சில பாறைகளில் பண்டைய தமிழ் கல்வெட்டுக்களும் காணப்பட்டன. ஆலயத்தின் பின்புறம் கடலை நோக்கிய பாறைச் சரிவு ஒன்று உள்ளது. அங்கே நின்று கீழே பார்க்கும் போது, கடல் அலைகள் பாறைகளைத் தாக்கி வெண்மையான நுரையை எழுப்புகின்றன. காற்று முகத்தில் மோதும் போது மனம் முழுவதும் ஒரு தெய்வீக மகிழ்ச்சி பரவியது. சிலர் அந்தப் பாறையின் அருகே நின்று புகைப்படம் எடுத்துக்கொண்டனர், சிலர் அமைதியாக கடலைப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

அந்தப் பகுதியின் சிறப்பு என்னவெனில் சூரியன் மறையும் நேரத்தில் கடல் மேல் விழும் ஒளி தங்க நிறத்தில் மின்னும். நான் அந்த நேரத்தில் அங்கே இருந்தபோது, சூரியன் மெதுவாக கடல் மேல் தன் ஒளியைப் பாய்ச்சியபடி மறைந்தான். அந்த காட்சி என் மனதில் என்றும் நிலைத்து விட்டது.

திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் பின்னாலுள்ள கடல் பாறைகளில் ‘இராவணன் வெட்டு’ என்று அழைக்கப்படும் ஒரு இடம் உள்ளது. ஆலயத்துக்கு வந்தால், பின்புறம் கடலை நோக்கிச் செல்லும் பாதையில் அதைக் காணலாம். அந்தப் பாறைகள் கடலின் மீது சாய்ந்திருப்பது போலத் தோன்றும் அங்கேயே ஒரு ஆழமான வெட்டு பாறையில் காணப்படுகிறது. இதுவே இராவணன் வெட்டு என்று அழைக்கப்படுகிறது. இலங்கையின் வரலாற்றிலும் இந்த இடத்தின் பெயரிலும் ‘இராவணன்’ என்ற பெயர் அடிக்கடி வரும். இராமாயணக் கதையின் படி இராவணன் இலங்கையின் பேரரசராக இருந்தான். அவன் சிவபெருமானின் பெரும் பக்தனாகவும் கூறப்படுகிறான். அவன் தன்

ஆட்சியின்போது திருகோணமலையில் வழிபாடு செய்ததாகப் பழமையான நம்பிக்கைகள் தெரிவிக்கின்றன. ஒரு புராணக் கதையின் படி இராவணன் கைலாய மலையில் இருந்து சிவலிங்கத்தை எடுத்துச் செல்ல முயன்றான். அவன் அதை இங்கு கொண்டு வந்தபோது, அதனை வைக்க முயன்ற தருணத்தில் சிவபெருமான் அவனின் அகந்தையைச் சோதித்தார்.

அதனால் கோபமடைந்த இராவணன் தன் வாளால் அந்தப் பாறையை வெட்டியதாக நம்பப்படுகிறது. அதுவே இன்றும் ‘இராவணன் வெட்டு’ என்று அழைக்கப்படுகிறது. அந்த இடத்தில் நின்று பார்ப்பவர்களுக்கு அந்தப் பாறையின் வெட்டு மிகவும் வித்தியாசமாகத் தெரியும். அது இயற்கையாக ஏற்பட்ட ஒரு பிளவு அல்ல என்று சிலர் கூறுகிறார்கள். ஏனெனில் அந்த வெட்டு நேர்த்தியாகவும் ஆழமாகவும் உள்ளது. சிலர் அதை “மனிதன் செய்தது போல” எனவும் மற்றவர்கள் ‘இயற்கையின் வினை’ எனவும் விளக்குகின்றனர். எதுவாக இருந்தாலும் அந்த வெட்டின் அருகே நின்று கடலை நோக்கிப் பார்த்தால், மனதில் ஒரு வலிமை, ஒரு மர்மம், ஒரு தெய்வீக உணர்வு ஏற்படுகின்றது. அலைகள் அந்தப் பாறையை அடித்துக் கொண்டே இருக்கும். ஆனால் அந்த வெட்டு எப்போதும் அதேபோல நிற்கிறது.

திருகோணமலை ஒரு பன்முகப் பண்பாட்டுக் கலவை கொண்ட நகரம். இங்கு தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் அனைவரும் அமைதியாக வாழ்கின்றனர். ஆலயத்துக்கு வருபவர்கள் பல இனத்தவராக இருந்தாலும் அனைவரின் மனதிலும் ஒரே பக்தி. அந்தப் பக்தியின் சக்தி தான் இந்த ஆலயத்தை இன்னும் உயிர்ப்புடன் வைத்திருக்கிறது.

ஆலயத்தைச் சுற்றி சிறிய கடைகள் இருந்தன. அங்கிருந்து சிறிய சின்னங்கள் சிவலிங்கம் வடிவில் கல் பொருள்கள், பூமாலை, தீபங்கள் வாங்கிக் கொண்டேன். மாலை நேரம். கடல்காற்று வீசியது. ஆலயத்தை விட்டு கீழே இறங்கும் போது மனதில் ஒரு அமைதியும் மகிழ்ச்சியும் கலந்து இருந்தது. திருக்கோணேஸ்வரர் ஆலயப் பயணம் என் வாழ்க்கையில் ஒரு ஆன்மீக அனுபவமாக இருந்தது. அந்த மலைமேல் இருந்து பார்த்த கடல் இன்னும் என் கண்களில் மின்னுகிறது. அந்தக் கடலின் இசை அந்த ஆலயத்தின் மணி ஓசை இரண்டும் சேர்ந்து என் உள்ளத்தில் இன்னும் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன.

இந்தப் பயணம் எனக்கு உணர்த்தியது கடவுள் என்பது ஒரு சிலை அல்ல. ஒரு உணர்வு. அந்த உணர்வை நாம் உணரும்போது தான் நம் மனம் நிம்மதியை அடைகிறது.

# ஐஸ் போதைப் பொருளுடன் ஒலுவிலில் இருவர் கைது!

**(றிபாஸ்)**

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஒலுவில் பிரதேசத்தில் ஐஸ் போதைப் பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய உபபொலிஸ் பரிசோதகர் யூ.எல்.எஸ். ஆப்தீன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்துக்குச் சென்று சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஒருவரிடம் இருந்து 145 மில்லி கிராம் ஐஸ் போதை பொருளும் மற்றைய நபரிடம் இருந்து 135 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை நேற்று திங்கள் கிழமை (27) அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது நவம்பர் 9 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலதி விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# மலேசிய கடலோர காவல்படையின் கப்பல் இலங்கை வந்தடைந்தது

**(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)**

மலேசிய கடலோர காவல்படை கப்பலான ‘KM BENDAHARA’ நேற்று (27) திங்கட்கிழமை வழங்கல் மற்றும் சேவை தேவைகளை பூர்த்தி செய்வதற்காக இலங்கையை வந்தடைந்தது. இலங்கைக் கடற்படையினர் கடற்படை மரபுகளுக்கு இணங்க கொழும்பு துறைமுகத்தில் குறித்த கப்பலை வரவேற்றனர்.

இலங்கையை வந்தடைந்துள்ள RELIANCE CLASS – MEDIUM ENDURANCE CUTTER வகைக் குரிய ‘KM BENDAHARA’ என்ற கப்பல் 64.16 மீற்றர் நீளம் கொண்டது. 50 பேரைக் கொண்ட அங்கத்துவ குழுவினரைக் கொண்டுள்ளது. மேலும் இந்தக் கப்பலின் கட்டளை அதிகாரியாக கொமாண்டர் (Maritime) Mohd Fahimi Bin Omar கடமையாற்றுகின்றார்.

‘KM BENDAHARA’ கப்பல் தீவில் தங்கியிருக்கும் காலத்தில், கப்பலின் குழுவினர் தீவின் முக்கிய இடங்களைப் பார்வையிட பல பகுதிகளுக்குச் செல்ல உள்ளது. இந்தக் கப்பல் தனது உத்தியோகபூர்வ பயணத்தை முடித்துக் கொண்டு நாளை மறுதினம் 30ஆம் திகதி இலங்கையில் இருந்து புறப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.











# மூதூரில் மார்பகப் புற்றுநோய் தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்வு

(ஹஸ்பர் ஏ.எச்.)

ஒக்ரோபர் மாதம் மார்பகப் புற்று நோய் விழிப்புணர்வு மாதமாகக் கொண்டாடப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் ஒக்ரோபர் மாதம் உலகளவில் “மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதம்” எனக் கொண்டாடப்படும் நிலையில், அதனை முன்னிட்டு மூதூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் என். எம். கஸ்ஸாலி மற்றும் வைத்தியர் எஸ். கே. விஜேவர்தன வழிகாட்டுதலின் கீழ் விழிப்புணர்வு நிகழ்வுகள் நேற்று (27) மூதூர் பிரதேசத்தில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுகள் மூதூர் அக்கறை சேனை தாய் சேய் நிலையம் மற்றும் பாட்டாளிபுரம் தாய்சேய் பராமரிப்பு நிலையம் ஆகிய இடங்களில் முறையே நடைபெற்றன.

மார்பகப் புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், குடும்ப நல உத்தியோகத்தர்கள் மூலம் புற்றுநோயின் ஆரம்ப அறிகுறிகள், பரிசோதனையின் அவசியம், தன்னிறைவு, பரிசோதனை முறைகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் விரிவான விளக்கங்கள் வழங்கப்பட்டன.

கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் ஆரோக்கியமான வாழ்க்கை முறை, சரியான உணவு பழக்கவழக்கங்கள் மற்றும் ஒழுங்கான மருத்துவ பரிசோதனையின் அவசியம் பற்றியும் வலியுறுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் குடும்ப நல உத்தியோகத்தர்கள், சுகாதார பணியாளர்கள், கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

மார்பகப் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஊக்குவிக்கும் நோக்கில், இத்தகைய நிகழ்வுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.




# கார்மேல் பற்றிமா கல்லூரியின் இரு மாணவர்கள் கௌரவிப்பு!





(றிபாஸ்)

கல்முனை கல்வி வலயத்துக்கு உட்பட்ட கார்மேல் பற்றிமா கல்லூரியின் மாணவர்களான சுதர்சன் பவபிரணித், வேனுகாந் தக்க்ஷரா ஆகிய இரு மாணவர்கள் நற்பிட்டிமுனை அல்-கரீம் பவுண்டேசன் ஏற்பாட்டில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

தரம் ஐந்து புலமைப் பரீட்சையில் சித்தியடைந்தமையையிட்டு பவுண்டேசனின் பணிப்பாளர் சட்டத்தரணி சீ.எம்.ஹலீம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவித்தனர்.

# கரூர் நெரிசல் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரிடம் மன்னிப்பு கோரினார் விஜய்

கரூர் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை மாமல்லபுரம் அருகே உள்ள தனியார் நட்சத்திர விடுதியில் சந்தித்து த.வெ.க. தலைவர் விஜய் ஆறுதல் கூறியுள்ளார்.

கூட்டநெரிசல்சம்பவத்துக்காகவும், கரூருக்கு நேரில் வந்து ஆறுதல் கூற இயலாததற்காகவும் அவர்களிடம் விஜய் மன்னிப்பு கோரியுள்ளார். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தன்னால் முடிந்த அனைத்து உதவிகளையும் செய்யத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

கரூரில் த.வெ.க. தலைவர் விஜய் பங்கேற்ற பிரச்சாரக் கூட்டத்தில், நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். ஏராளமானோர் படுகாயமடைந்தனர். இதுதொடர்பாக உச்ச நீதிமன்ற உத்தரவின்பேரில் சி.பி.ஐ. விசாரணை நடந்து வருகிறது.

இந்நிலையில், கரூர் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை மாமல்லபுரம் பகுதியில் உள்ள தனியார் நட்சத்திர விடுதியில் விஜய் சந்தித்து ஆறுதல் கூறும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.



இதற்காக, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் நேற்று முன்தினம் 2 பஸ்கள் மூலம் அழைத்து வரப்பட்டு விடுதியில் தங்க வைக்கப்பட்டனர். உயிரிழந்தவரின் குடும்பத்தைச் சேர்ந்த 5 நபர்களுக்கு மட்டுமே அனுமதிவழங்கப்பட்டதாக தெரிகிறது.

இந்நிலையில், நேற்று காலை 8.15 மணிக்கு த.வெ.க. தலைவர் விஜய் விடுதிக்கு வந்து, உயிரிழந்த 37 குடும்பத்தில் இருந்து 235 பேரை சந்தித்து ஆறுதல் கூறினார். இதில் உயிரிழந்த அஜிதா என்ற கல்லூரி மாணவியின் குடும்பத்தில் இருந்து மட்டும் யாரும் வரவில்லை. ஒவ்வொரு குடும்பத்தினரையும் தனித்தனியாக சந்தித்து சுமார் 5 நிமிடம் பேசி ஆறுதல் கூறினர் என கூறப்படுகிறது.

கூட்டநெரிசல்சம்பவத்துக்காகவும், கரூருக்கு நேரில் வந்து ஆறுதல் கூற இயலாததற்காகவும் அனைவரிடமும் விஜய் கண்ணீர்மல்க மன்னிப்பு கோரி உள்ளார். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தன்னால் முடிந்த அனைத்து உதவிகளையும் செய்யத் தயாராக இருப்பதாக விஜய் கூறியுள்ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 5 லட்சம் இந்திய ரூபா வரையிலான மருத்துவக் காப்பீடு த.வெ.க. சார்பில் வழங்கப்படும் என்றும் விஜய் உறுதி அளித்துள்ளார்.

இந்த நிகழ்ச்சியில், ஆதவ் அர்ஜூனா உட்பட பல்வேறு நிர்வாகிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி நிறைவடைந்ததும் அனைவரும் மீண்டும் இரண்டு பஸ்கள் மூலம் கரூர் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

# வாக்காளர்கள் பட்டியல் திருத்தத்துக்கு எதிர்ப்பு: கூட்டணி கட்சிகளுடன் ஸ்டாலின் ஆலோசனை

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி (எஸ்.ஐ.ஆர்) இன்று தொடங்குவதாக தேர்தல் ஆணையம் நேற்று அறிவித்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வது தொடர்பாக தி.மு.க. சார்பில் கூட்டணிக் கட்சிகள் உடனான ஆலோசனைக் கூட்டம் சென்னையில் நேற்று நடைபெற்றது.

இந்த கூட்டத்துக்கு முதல்வரும், தி.மு.க. தலைவருமான ஸ்டாலின் தலைமை வகித்தார். அமைச்சர்கள்



கே.என்.நேரு,தங்கம் தென்னரசு, எ.வ.வேலு, எஸ்.ரகுபதி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, இந்திய கொம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் .வீரபாண்டியன், மார்க்சிஸ்ட் முன்னாள் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், விசிக எம்.பி. ரவிக்குமார், தமிழக காங்கிரஸ் முன்னாள் தலைவர் கே.வீ.தங்கபாலு உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

இந்த கூட்டத்தில், எஸ்.ஐ.ஆர். திட்டத்துக்கு எதிராக அனைத்துக் கட்சி கூட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது.

# போர் சூழலுக்கு எப்போதும் தயாராக இருக்க வேண்டும்



## *மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவிப்பு*

இந்திய இராணுவம் எப்போதும் போர் சூழலுக்கு தயாரான நிலையில் இருக்க வேண்டும் என்று பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கடந்த மே மாதத்தில் பாகிஸ்தான் உடன் நடைபெற்ற நான்கு நாள் இராணுவ மோதல் எல்லைகளில் எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்பதை நமக்கு கோடிட்டு காட்டியுள்ளது. இந்த சம்பவம் நாம் சுயபரிசோதனை செய்து கொண்டு போர் போன்ற சூழ்நிலைக்கு எப்போதும் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்துகிறது.

ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது பாகிஸ்தானுக்கு இந்தியா உறுதியான பதிலடியை தந்தது. இருந்தபோதிலும் தேசிய பாதுகாப்பு சவால்களை கையாள்வதில் திட்டமிடலுக்கும், எதிர்கால நடவடிக்கையை கற்றுக்கொள்வதற்கும் இது ஒரு நல்ல பாடமாக அமைந்தது.

மே 7 முதல் 10 வரை மேற்கொள்ளப்பட்ட பாகிஸ்தானுக்கு எதிரான நடவடிக்கையின்போது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இராணுவ உபகரணங்களை நாம் திறம்பட பயன்படுத்தியது, பிராந்திய மற்றும் சர்வதேச அளவில் இந்தியாவின் நற்பெயரை உயர்த்தியது.

ஒபரேஷன் சிந்தூர் சம்பவமானது நமது எல்லைகளில், எங்கும், எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்பதை மீண்டும் ஒரு முறை நமக்கு நினைவுபடுத்தியுள்ளது.

எந்த நேரத்திலும் எதிரிகளின் தாக்குதலை சமாளிக்க நாம் நமது சொந்த அடித்தள கட்டமைப்பை மட்டுமே நம்பியிருக்க வேண்டும். தற்போதைய உலகளாவிய நிச்சயமற்ற தன்மைகள் ஒவ்வொரு களத்தையும் ஆழமாக மதிப்பிட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன.” என்று தெரிவித்துள்ளார்.



# ரஷ்யா அணு ஆயுத சோதனைக்கு டொனால்ட் ட்ரம்ப் கடும் கண்டனம்

ரஷ்யாவின் அணு ஆயுத சோதனைக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் டும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா சமீபத்தில் அணுசக்தி மூலம் இயங்கும் புரெவெஸ்ட்னிக் என்ற கப்பல் ஏவுகணை சோதனையை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மற்றும் மூத்த இராணுவ தளபதிக்கு இடையிலான உயர்மட்ட சந்திப்புக்கு பிறகு இந்த தகவல் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில் குறித்த புதிய அணு ஆயுத சோதனைக்கு டொனால்ட் ட்ரம்ப் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, இது ஏவுகணை சோதனைக்கான பொருத்தமற்ற காலம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், புதிய ஏவுகணைகளை சோதனை செய்வதை விட்டு விட்டு, உக்ரைனுடனான போர் நடவடிக்கையை முடிவுக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கையில் கவனம் செலுத்த வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஒரு வாரத்தில் முடிய வேண்டிய போர் தற்போது விரைவில் நான்காவது ஆண்டை அடைய இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# சீன கடல் பரப்பில் விழுந்து நொறுங்கின அமெரிக்க விமானம், ஹெலிக்கொப்டர்

அமெரிக்காவின் போர் விமானம் ஒன்றும் கடற்படைக்கு சொந்தமான ஹெலிக்கொப்டர் ஒன்றும் விபத்துக் குள்ளாகியுள்ளன.

தென் சீனக்கடல் பகுதியில் நேற்று முன்தினம் இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தநிலையில், உள்ளூர் நேரப்படி மதியம் 2.45 மணியளவில் அமெரிக்க ஏவுகணை விமானம் தாங்கிக் கப்பல் யு.எஸ்.எஸ் நிமிட்ஸில் இருந்த எம்எச் 60ஆர் சீஹாக் ஹெலிக்கொப்டர் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த கப்பலில், இருந்த மூன்று விமானிகள் பாதுகாப்பாக வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதையடுத்து, பிற்பகல் 3:15 மணியளவில் எப்ஏ-18 எப் சூப்பர் ஹார்னெட் போர் விமானம் ஒன்றும் விபத்துக் குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் சிக்கிய இரண்டு விமானிகள் பாதுகாப்பாக வெளியேறியுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அடுத்தடுத்த விபத்து சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு வருவதாக அமெரிக்க கடற்படை தெரிவித்துள்ளது. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விரைவில் சீன ஜனாதிபதியை சந்திக்கவுள்ளார்.

இந்தநிலையில், அமெரிக்காவின் ஹெலிக்கொப்டர் மற்றும் விமானம் என்பன அடுத்தடுத்து தெற்கு சீனப் பகுதியில் விபத்துக்குள்ளாகியிருப்பது பல்வேறு கேள்விகளையும், சந்தேகங்களையும் கிளப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.





கனடா முரசு

செவ்வாய்க்கிழமை | 28/10/2025

## டொரொண்டோவில் உறைபனி எச்சரிக்கை

டொரொண்டோ பெரும்பாக பகுதி மற்றும் நயாகரா பிராந்தியத்தின் சில பகுதிகளுக்கு உறைபனிபொழிவு எச்சரிக்கை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கனடிய சுற்றாடல் 02



# கனடா பிரதமர் கார்னியை சந்திக்க மறுத்தார் ட்ரம்ப்

**கனடா பிரதமர் மார்க் கார்னியை சந்திக்க விருப்பம் இல்லை என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். ஆசியான் உச்சி மாநாட்டில் பங்கேற்ற டொனால்ட் ட்ரம்ப் தமது ஆசிய பயணத் தின் இரண்டாவது கட்டமாக ஜப்பான் தலைநகர் டோக்கியோவிற்கு விஜய மொன்றை மேற்கொண்டுள்ளார்.**

இதன்போது இந்த வார இறுதியில் ஆசிய, பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு உச்சி மாநாட்டில் கனடா பிரதமர் மார்க் கார்னியை சந்திக்க வாய்ப்பு உள்ளதா என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இதற்கு பதிலளித்த டொனால்ட் டர்ம்ப்,

“நான் அவரை சந்திக்க விரும்பவில்லை. இன்னும் சிறிது காலம் நான் அவரை சந்திக்க போவது இல்லை.

கனடாவுடன் தற்போது செய்து கொண்டுள்ள ஒப்பந்தம் மிகவும் மகிழ்ச்சி தருகின்றது, அதை செயல்படுத்த உள்ளோம்” என தெரிவித்துள்ளார்.

# கனடாவில் நவம்பர் 2 இல் அறிமுகமாகும் நேர மாற்றம்

எதிர்வரும் நவம்பர் 2ஆம் திகதி காலை 2.00 மணிக்கு, கனடா முழுவதும் கடிகாரங்கள் ஒரு மணி நேரம் பின் நகர்த்தப்படவுள்ளன.

இதனுடன் “டேலைட் சேவிங் டைம்” எனப்படும் பண்டைய நடைமுறை இவ்வாண்டிற்கான கடைசி மாற்றத்தைக் காணும். ஆனால் இந்நடைமுறை குறித்து விமர்சனங்கள் வலுத்துள்ளன.


லிபரல் எம்.பி. மேரி-ஃபிரான்ஸ் லலோன்ட் சமீபத்தில் தனியார் உறுப்பினர் மசோதா ஒன்றை முன்வைத்துள்ளார்.

இதில், வருடத்திற்கு இருமுறை நேர மாற்றும் பழக்கத்தை நிறுத்தி, நாடு முழுவதும் ஒரே நிலையான நேர முறைமை ஒன்றை உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரியுள்ளார்.




இந்த நடைமுறையால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் - மருத்துவம், விவசாயம், 24 மணி நேர வேலைகள் போன்ற துறைகளின் நிபுணர்கள் - அனைவரும் இதைப் பற்றி

03




# அமெரிக்கா செல்லும் கனடியர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள அவசர எச்சரிக்கை

அமெரிக்காவுக்குள் பிரவேசிக்கும் கனடியர்களுக்கு புதிய அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், அமெரிக்கா பிரவேசிக்கும் கனடியர்களை புகைப் படம் எடுக்கும் புதிய திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட உள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

அமெரிக்காவுக்கும் மற்றும் கனடா வுக்கும் இடையில் அண்மைய நாள்க ளாக கடுமையான முரண்பாட்டு நிலைமைகள் காணப்படுகின் றன.

வர்த்தக ரீதியான போராட்டங்கள் கடுமையான நிலையை அடைந்துள் ளது.

இவ்வாறான ஓர் பின்னணியில் அமெரிக்காவிற்குள் பிரவேசிக்கும் கனடியர்கள் எல்லை பகுதிகளில் வைத்து புகைப்படம் எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் டொரன்டோவின் பிரபல மனநல நிபுணர் வாரன் ஷெபெல் அமெரிக்காவிலிருந்து திரும்பிய போது சீருடை அணிந்த அமெரிக்க அதிகாரிகள் அவரை புகைப்படம் எடுத்தனர் என தெரிவித் துள்ளார்.

விமானம், கடல் மற்றும் தரைவழி போக்குவரத்து ஊடாக அமெரிக்கா விற்குள் பிரவேசிக்கும் கனேடியர்க ளின் முகங்கள் படம் எடுக்கப்பட்டு பதிவு செய்யப்பட உள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

அமெரிக்க சுங்கம் மற்றும் எல்லை பாதுகாப்பு நிறுவனம் ஏற்கனவே பயோமெட்ரிக் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பயணிகளின் முகத்தை சரி பார்க்கும் திட்டம் ஒன்றை நடை முறைப்படுத்தி வருகின்றது.

குறிப்பாக பயணிகளின் கடவு சீட்டுடன் அவர்களது முகத்தையும் ஒப்பிட்டு பார்க்கும் முறை என தெரி விக்கப்படுகின்றது.

எதிர்வரும் 2026 ஆம் ஆண்டுக்குள் இந்தத் திட்டம் முழுமையான அள வில் அமெரிக்காவில் நடைமுறைப் படுத்தப்பட உள்ளதாக எதிர்பார்க்கப் படுகின்றது.

முதலில் விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வுள்ளது.

இந்தநிலையில், அமெரிக்க பிரஜைகள் அல்லாத கனடியர்கள் உள்ளிட்ட ஏனைய அனைத்து வெளி நாட்டு பிரஜைகளின் முகப் படங்க ளும் பதிவு செய்யப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சட்டவிரோத குடியேற்றத்தை தடுப்பதற்கும் பாதுகாப்பு நோக்கங் களுக்காகவும் இவ்வாறு அமெரிக்க அதிகாரிகள் பயணிகளை புகைப்படம் எடுப்பதாக தெரிவிக்கப்படுகின் றது.

இருப்பினும், இந்த நடவடிக்கையா னது மக்களின் தனியுரிமையை பாதிக் கக் கூடும் என எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## டொரொண்டோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கை டொரொண்டோ நகரம், மிசிசாகா-ப்ராம்ப்டன், நயாகரா ஃபால்ஸ்-வேலண்ட்-தெற்கு நயாகரா பிராந்தியம், மற்றும் செயின்ட் கத்தரீன்ஸ்-கிரிம்ஸ்பி-வடக்கு நயாகரா பிராந்தியம் ஆகிய பகுதிகளுக்கு பொருந்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பனிப்பொழிவு காரணமாக சில பயிர்கள் சேதமடைய வாய்ப்புள்ளது என எச்சரிக்கப்பட்டுள்ளது.

தங்கள் மரங்கள் மற்றும் செடிகளை மூடிப்பாதுகாக்குமாறும் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள் ளது.



# சவால்களை எதிர்கொளும் கனடா குடியேற்ற அமைப்பு

கனடாவின் குடியேற்ற அமைப்பு முன்னெப்போதும் இல்லாத சவால்களை எதிர்கொள்வதா சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நடப்பு ஆண்டில் கல்வி மற்றும் பணி தொடர்பான விசா நிராகரிப்புகள் அதிகரித்து வருவதால் கனடாவின் குடியேற்ற அமைப்பு இவ்வாறு முன்னோடியில்லாத சவால்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

புதியவர்களை வரவேற்பதில் தமது நவீன அடையாளத்தை கட்டியெழுப்பும் முயற்சியில் கனடா ஈடுபட்டுள்ள நிலையில், பெருமளவிலான மக்கள் கனடாவை விட்டு வெளியேறியுள்ளனர் என கூறப்படுகிறது.

மேலும் குறியேற்றம் தொடர்பிலான நீதிமன்ற வழக்குகளின் தாக்கமும் இதற்கு காரணம் என கூறப்படுகிறது.

கனடாவின் குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைப்பின் (IRCC) புதிய தரவுகளின்படி, 2025 ஜனவரி முதல் ஒகஸ்ட் வரை, கடந்த ஆண்டு இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 278,900 பேர் மக்கள் கனடாவிற்கு வருகைத்தந்துள்ளனர் என கூறப்படுகிறது.

அத்தோடு, கனடா மனித உதவியுடன் கூடிய குடியேற்றத் திரையிடலுக்கு மாறியிருப்பது உள்நாட்டில் நியாயத்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மையின் நெருக்கடியைத் தூண்டியுள்ளது என்று அந்நாட்டு சட்டத்தரணிகள் கூறியுள்ளனர்.

கடந்த ஒகஸ்ட் 2025 இல், 45,380 கல்வி வீசா அனுமதிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்றும், இது கடந்த ஆண்டில் 79,795 ஆக இருந்ததாகவும் கூறப்படுகிறது.

மேலும், அதே மாதத்தில் பணி அனுமதிகள் 26,075 லிருந்து 16,890 ஆகக் குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கனடாவின் பெடரல் நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டில் 36,400 குடியேற்ற வழக்குகளை பதிவு செய்ய திட்டமிட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட 47 வீத அதிகரிப்பு, மேலும் 2019 முதல் கிட்டத்தட்ட ஐந்து மடங்கு அதிகம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடியேற்ற சட்டதரணிகளின் கருத்தின்படி,

"இந்த அதிகரிப்பு நிர்வாக நியாயத்தில் வளர்ந்து வரும் நம்பிக்கையின்மையை பிரதிபலிக்கிறது.

ஒரு முடிவு நியாயமானதா என்பதை நீதிமன்றம் சரிபார்க்கிறது. இல்லையென்றால், அது வழக்கை வேறொரு அதிகாரிக்கு திருப்பி அனுப்புகிறது.

ஆயிரக்கணக்கான நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு, குறிப்பாக சர்வதேச மாணவர்கள் மற்றும் தொழில்முனைவோருக்கு, நீதித்துறை மதிப்பாய்வுகள் இப்போது ஒரே பயனுள்ள மேல்முறையீட்டு வழிமுறையாக மாறியுள்ளன" என தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் கனடாவின் 2026-2028 குடிவரவு நிலைத் திட்டம், எதிர்வரும் நாள்களில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்தோடு, தற்காலிக குடியிருப்பாளர்களுக்கான வசதிகளின் குறைப்புகள் எவ்வளவு ஆழமாகச் செல்கின்றன என்பதை மேலும் திட்டம் தெளிவுபடுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திறந்தவெளியில் பேச வேண்டும். பெற்றோர்கள், இளைஞர்கள் என அனைவரும் இதில் பங்கேற்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

ஒரு மாகாணம் ஒரு குறிப்பிட்ட நேர முறையைத் தேர்ந்தெடுத்தாலும், அது ஆராய்ச்சி ஆதாரங்களின் அடிப்படையில் இருக்க வேண்டும். எவ்வாறாயினும், வருடத்திற்கு இருமுறை நேரத்தை மாற்றும் பழக்கத்தை நிறுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

"ஒரு மணி நேரத்திற்குக் கூட சமூக நேரத்தை மாற்றுவது உடல் கடிகாரத்துக்கு ஒரு 'ஜெட் லாக்' போலே. இது தூக்கம், உணவு ஆசை, மனநிலை, இருதய ஆரோக்கியம் ஆகியவற்றில் குழப்பத்தை ஏற்படுத்தும்," என யார்க் பல்கலைக்கழக உயிரியல் பேராசிரியர் டாக்டர் பட்ட்ரிசியா லேகின்-தாமஸ் தெரிவித்துள்ளார்.

மனித உடலில் உள்ள உள் உயிரியல் கடிகாரம் வெளிச்சத்தால் கட்டுப்படுத்தப்படுகிறது.

காலை வெளிச்சம் உடலின் நேர ஒழுங்கை இயல்பாக வைத்திருக்க உதவுகிறது. நேர மாற்றம் இதைச் சீர்குலைக்கும் என்று அவர் கூறியுள்ளார்.